கும்பகோணம் நகராட்சி 150வது ஆண்டு

2014ம் ஆண்டின் சிறந்த நகராட்சி – முதல் பரிசு

# கும்பகோணம் நகர்மன்றம்

## சாதாரணக் கூட்டம்

## நாள் : 29.11.2019

# 29.11.2019ம் தேதிய நகர்மன்ற சாதாரண கூட்ட பொருள்கள்

<table>
<tr><th>நகர்மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>29.11.2019</td><td>பொருள் எண்.1<br>இந்நகராட்சியில் 2019–20ம் ஆண்டு நடைபெறும் பணிகளுக்கு ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகஸ்தர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கும், இந்நகராட்சி பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கும் அவ்வப்போது (TDS) E-Filing INTEGRATED DATE MANAGEMENT SERVICE PRIVATE LIMITED நிறுவனத்தின் மூலம் செய்வதற்கு 2019–2020ம் ஆண்டுக்கு உத்தேச செலவினமாக ரூ.35,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u> அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண்.13647/2012/பி2</td><td>நகர்மன்ற தீர்மான எண்.507<br>அனுமதி வழங்கப்பட்டது.</td></tr>
<tr><td></td><td>பொருள் எண்.2<br>இந்நகராட்சி புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டத்தில் பணியாற்றும் சத்துணவு அமைப்பாளர்களை மாவட்ட ஆட்சியர் செயல்முறை உத்தரவின்படி பணியிட மாறுதல் செய்யப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட கீழ்கண்ட வழக்குகளுக்கு இந்நகராட்சி சார்பாக ஆஜரான திரு.எம்.ராஜராஜன், வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு<br><br><table><tr><th>வ.எண்</th><th>வழக்கு எண்</th><th>தொகை ரூ</th></tr><tr><td>1.</td><td>WP (MD) 5591/2019</td><td>9500/–</td></tr><tr><td>2.</td><td>WP (MD) 5592/2019</td><td>9500/–</td></tr><tr><td>3.</td><td>WP (MD) 5593/2019</td><td>9500/–</td></tr><tr><td>4.</td><td>WP (MD) 5594/2019</td><td>9500/–</td></tr></table><br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. தனி அலுவலர் முன் அனுமதி பெற்று தொகை வழங்க அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2942 /2019 /சி3</td><td></td></tr>
<tr><td></td><td>பொருள் எண்.3<br>இந்நகராட்சி பராமரிப்பில் உள்ள பல்வேறு கணினி பிரிண்டர்களுக்கு தேவையான Toner–களை அவ்வப்போது வாங்கிக்கொள்ளவும் மற்றும் மை நிரப்பும் பணிகளை மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/–ஐ வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 12098 / 2019 / சி5</td><td></td></tr>
<tr><td></td><td>பொருள் எண்.4<br>திரு.நவநீதகிருஷ்ணமூர்த்தி என்பவர் இந்நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண்.W.P(MD) no.15082 of 2019-ல் இந்நகராட்சி சார்பாக ஆஜரான திரு.எம்.ராஜராஜன்,</td><td></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ.10,000/— வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம். 2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம். 3. அவசர அவசியம் கருதி வழக்கறிஞருக்கு தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 11383 / 2019 / எச்2** | |
| | **பொருள் எண்.5**<br>இந்நகராட்சி பகுதியில் டெங்கு கொசு உற்பத்தியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்காக தேவையான மல்டி கலர் ஸ்டிக்கர் (மாதாந்திர கணக்கெடுப்பு படிவம்) மற்றும் டெங்கு காய்ச்சல் பற்றிய விழிப்புணர்வு மல்டி கலர் நோட்டீஸ் தலா — 25000 எண்ணிக்கை வாங்க ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.5,00,000/— (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்காக பொருள் ஒப்புதலுக்காக.<br><br>**அலுவலக குறிப்பு:** அனுமதி அளிக்கலாம்.<br>**ந.க.எண். 10835 / 2019 / எச்1** | |
| | **பொருள் எண்.6**<br>இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு.16ம் கோட்டத்தில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரம் திரு.ராஜேந்திரன் த/பெ.ஆறுமுகம் என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் W.P(MD)/3570 of 2019 நாள்.18.2.2019 என்ற தீர்ப்பில் புதிய ஊதியம் நிர்ணயம் செய்யவும், நிலுவை தொகைகளை வழங்கவும், தொடரப்பட்ட வழக்கிற்கு இந்நகராட்சி சார்பாக ஆஜராகியதற்கான கட்டணம் ரூ.10,000/—ஐ வழங்குமாறு திரு.எம்.ராஜராஜன், அரசு வழக்கறிஞர் மதுரை கிளை உயர்நீதிமன்றம் அவர்கள் கடிதம் மற்றும் நீதிமன்ற தீர்ப்பு நகலை கொடுத்துள்ளார்கள். எனவே இவ்வழக்கிற்கு நகராட்சி சார்பாக ஆஜராகியதற்கான கட்டணம் ரூ.10,000/— (ரூபாய் பத்தாயிரம்) திரு.எம்.ராஜராஜன், அரசு வழக்கறிஞர் மதுரை கிளை உயர்நீதிமன்றம் அவர்களுக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.<br>**ந.க.எண். 10835 / 2019 / எச்1** | |
| | **பொருள் எண்.7**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்காவேரி காமராஜர் உயர்நிலைப் பள்ளியில் கழிவறை கட்டும் பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள ரூ.12.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br><br>**அலுவலக குறிப்பு:** 1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம். 2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.11396 /2019/இ2** | |
| | **பொருள் எண்.8**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்கொட்டையூர் நகராட்சி தொடக்கப் பள்ளிக்கு புதிதாக சத்துணவுக் கூடம் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள ரூ.15.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு. | |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:** | 1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.<br>2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**ந.க.எண்.11395 /2019/இ2** | |

**09)** இந்நகராட்சிக்கு சொந்தமான மேலக்காவேரி காமராஜர் உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக்கு கூடம் கட்டும் பணியினை கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள ரூ.15.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**அலுவலக குறிப்பு:**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோர மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண்.11394 /2019/இ2**

---

**10)** கும்பகோணம் நகராட்சி பத்தாவது SHPC dated **31.10.2019**ல் கூட்ட நடவடிக்கைகளில் கும்பகோணம் நகராட்சியில் வளமீட்பு மையம் (Resource recovery Centre) அமைக்க ரூ.**18.00** லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே கும்பகோணம் நகராட்சி உட்பட்ட மாட்டு கொட்டகை வார்டு எண்.**23** மீன் அங்காடி அருகில் Resouree Recovery Centre அமைக்க மன்றத்தின் பார்வைக்கு.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண். / 2019 / இ2**

---

**11)** தமிழ் நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15**ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட கீழ்க்கண்ட பணிகள் மன்றத்தின் பார்வைக்கு.

| வ எண் | மதிப்பீட்டு எண்/கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | Roc.No.11338/2018/E3 | Supply and fixing of Railway Broad Band 2 Nos. Net work connection in Municipal Office. | 30000 | 14600 |
| 2 | 492C/2011-12 | Desilting and removing the slushy earth in Mori Channel from John Selvaraj Nagar (Bus stand) to Chekkankanni at word No.26 in Kumbakonam | 450000 | 448500 |
| 3 | 492D/2011-12 | Desilting and removing the slushy Earth in Mori Channel from Kannigambal Nagar at Ward No.7 & 24 in Kumbakonam Municipality | 435000 | 432982 |

| வ எண் | மதிப்பீட்டு எண்/கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 4 | 8267/2018/E2 | Analysing the stability of Existing Building at Rani Subbaiyan Municipal Middle School and submission of report to Kumbakonam Municipality | 23600 | 23600 |
| 5 | 144/2018-19 | Gardening and planting at road side on Pidarikulam road and CRC flyover junction. | 65000 | 57117 |
| 6 | 174/2018-19 | Inaguration arrangement of New Special Shelter Building constructed under NULM 2016-2017 at Government Head quarters Hospital at Kumbakonam by Hon'ble. Chief Minister, Tamilnadu | 178500 | 176014 |
| 7 | 3267/2018/E3 | Supply and delivery of Sodium Hypo Chloride for the purpose of Chlorination in drinking water at Valayapettai Booster station in Kumbakonam Municipality | 90000 | 90000 |
| 8 | 5016/2018/E3 | Providing of 110 mm PVC pipe at Karikulam in Kumbakonam Municipality | | 115127 |
| 9 | 8845/2018/E3 | Banadurai Municipal School New Panel board fixing work | | 5000 |
| 10 | 39/2018-19<br>2225.2019.E3 | Repairing of vertical turbine 180 HP motor pump set and desilting of sump in Kudithangi old well and Valayapettai Booster station. | 550000 | 547177 |
| 11 | 2764/2019/E3 | Repair of 5 KVA UPS for Engineering section in Municipal Office. | | 8400 |
| 12 | 2763/2019/E3 | Oil service for 50 KVA Generator in Municipal Office | | 6650 |
| 13 | 9440/2017/E3 | Providing temporary lighting arrangement for republic day 2019 | | 11800 |
| 14 | 3767/2019/E3 | Repairing work of Xerox canon 4225 model | | 38826 |
| 15 | 3768/2019/E3 | Repair works of Xerox AFIC10 2000 LE Model | | 20056 |
| 16 | 4284/2018/E2 | Shiffting EB cable adjacent to Bharat Nagar MCC building at UGD pumping station ward 24 | | 199770 |
| 17 | 3868/2019/E3 | Repairs of AC machine 3 Nos. Revenue Section UPS and Printer at E.S. Room | | 22600 |
| 18 | 10686/2018/E2 | Repairing of jet roding vechile | | 251216 |

| வ எண் | மதிப்பீட்டு எண்/கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. | செலவினம் ரூ. |
|---|---|---|---|---|
| 19 | 2224/2019/E3<br>Est. 40/2018-19 | Repairing of vertical Turbine 75 HP motor pumpset in Kudithangi Old Well | 490000 | 488160 |
| 20 | Roc.No. 3408/2019/D1 | Hire charges for JCB cost including fuel, oil, grease and driver salary working in Kumbakonam Municipality | 100000 | 90000 |
| 21 | Roc.No. 3267/2018/E3 | Supply and delivery of sodium Hypo chloride Solution for the purpose of Chlorination in drinking water of Headworks in Kumbakonam Municipality | 225000 | 225000 |
| 22 | Roc.No. 15770/2019/E3 | Repair and service of Bio Matric Device. | 20000 | 16650 |
| 23 | Roc.No. 11335/2018/E2<br>Est. No.34/2018-19 | Drilling of new borewell for water ATM at Periyathambi Nagar in Ward No.7 | 160000 | 157868 |
| 24 | Roc.No. 4199/2019/E2 | Maintenance and repairs to Borewell in Public toilet at ARR colony Bharathiyar Street and Moffusil Bus stand Chennai rack side | 250000 | 239393 |
| 25 | Roc.No. 4199/2019/E2 | Maintenance and repairs to public toilet at Trichy rack side in foffusil Bus stand | 225000 | 213911 |
| 26 | Roc.No. 3926/2019/H1 | Purchase of 2 HP Shredding machine for Bio waste at On site Compost Centres. | 145425 | 145425 |
| 27 | Roc.No. 1969/2019/E2<br>Est. No.45/2018-19 | Maintenance and Repairs to Birahi Thoppu Public toilet in ward No.23 | 250000 | 241135 |
| 28 | Roc.No. 3950/2019/E3<br>Est. No.1/2019-20 | Supply and delivery of Sodium Hypo Solutions for the purpose of Chlorination in Drinking water Head works | 100000 | 90000 |
| 29 | Roc.No. 3267/2018/E3 | Supply and delivery of Sodium Hypo Solutions for the purpose of Chlorination in Drinking water Head works | 100000 | 90000 |
| 30 | Roc.No. 14562/2017/D1 | Removal of encroachment at Olaipattinam Channel | 400000 | 397435 |
| 31 | Roc.No. 13315/2018/E2 | Dewatering from affected vacant land at Sindhu Nagar during 29.11.2018 to 03.12.2018 | 102000 | 100300 |
| 32 | Roc.No. | Supply and installation of 1 KVA online UPS system 1 No. with 26 AH/12V/SMF battery-3 Nos. at audit section | | 22350 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம்.

**12)** இந்நகராட்சி பயன்பாட்டில் உள்ள ஜெட்ராடிங் வாகனம் TN 68 AA 4780ல் பழுதுபட்டுள்ள ஜெட்ராடிங் இயந்திரத்தின் பழுதுகளை சீர்செய்து கொள்ளவும், மேற்படி பழுதுகளை அகற்ற கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் ஒப்புதலுக்கு.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளித் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | Whale Enterprise (P) Ltd.,<br>1/1D, Villankurichi Road,<br>Near Senthottam, Kalappatti,<br>Coimbatore 641 048. | **22645** |
| 2 | N.S. Ramarao Body works,<br>54A. GST Road,<br>Guindy, Chennai 600 032. | **25895** |
| 3 | Balu Steel Building,<br>10/1 Gandhiji Road,<br>Rathinapuri Post, Coimbatore 641 027 | **28145** |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. வரப்பெற்றதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள கோயம்புத்தூர் Whale Enterprise (P) Ltd., நிறுவனத்தாரின் விலைப்புள்ளித் தொகை ரூ.22645/—ஐ மன்றம் ஏற்கலாம்.
2. இப்பணிக்கான செலவினத்தினை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவிடலாம்.
3. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். /2019/இ2**

---

**13)** கும்பகோணம் நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் 2007ல் முடிவடைந்து 19327 இணைப்புகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேற்படி பாதாள சாக்கடை திட்டத்தினை பராமரித்திட தனியார் ஒப்பந்த நிறுவனமான InfraEn consulting Private Limited பெங்களூரு ஒப்பந்த நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் 14.11.2019 அன்று வார்டு எண் 26க்கு உட்பட்ட பகுதிகளான ரயில்வே புது ரோடு, வெங்கட்ராமன் நகர், காமராஜ் சாலை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் பாதாள சாக்கடை வழித்தடத்தில் அடைப்பு ஏற்பட்டுள்ளதாக தனியார் நிறுவனப் பணியாளர்களுக்கு தொலைபேசியில் வந்த தகவலின் அடிப்படையில் அதனை சரிசெய்திட காமராஜர் சாலையில் ஹோட்டல் கிருஷ்ணா பவன் அருகில் அடைப்பு நீக்கும் வாகனம் (Jet Rodding machine) வாகனங்களுடன் அடைப்பினை அகற்றுவதற்காக ஒப்பந்த நிறுவனத்தின் பணியாளர்களான திரு.ராஜா மேற்பார்வையாளர் அவர்கள் தலைமையில் விபுஹரன், வீரமணி, பாக்கியராஜ் மற்றும் சாதிக்பாட்சா ஆகிய 4 பேரும் பணியில் ஈடுபட முயற்சி செய்துகொண்டிருந்தனர். அப்பொழுது திரு.கே.சாதிக்பாட்சா வயது 53 என்பவர் ஆள் நுழைவு தொட்டி மூடியினை திறந்து ஜெட்ராடிங் வாகனத்தின் ஹோஸ் குழாயினை ஆய்வுக் குழியில் சொருகும்பொழுது நிலை தடுமாறி தொட்டி உள்ளே விழுந்துள்ளார். உடனிருந்த மேற்பார்வையாளர் திரு.ராஜா அவர்களால் தீயணைப்பு மற்றும் மீட்பு படையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு பணியாளர் மீட்கப்பட்டு கும்பகோணம் அரசு தலைமை மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவமனையில் பரிசோதிக்கப்பட்டு ஒப்பந்த பணியாளர் திரு.கே.சாதிக்பாட்சா இறந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இறந்தவரின் ஈமச்சடங்கிற்காக திரு.கே. சாதிக்பாட்சா அவர்களின் தாயார் திருமதி.கே.பாத்திமா பீவி அவர்கள் வசம் ரூ.1,50,000/— ஒப்பந்ததாரர் M/s. InfraEn consulting Private Limited பெங்களூரு நிறுவனத்தார் மூலம் 15.11.2019 அன்று நேரில் வழங்கப்பட்டுள்ளது.

M/s. InfraEn consulting Private Limited பெங்களூரு நிறுவனத்தாருடன் செய்து கொள்ளப்பட்டுள்ள இப்பணிக்கான ஒப்பந்த ஷரத்து, Section II, Part-I, General stipulation and condition வரிசை எண் 12ன் படி விபத்து மற்றும் இறப்புகள் நிகழும் சமயத்தில் அமுலில் உள்ள சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு அவற்றிற்கான இழப்பீடுகளை ஒப்பந்ததாரர் ஏற்க வேண்டும் எனவும், எந்தவொரு சேதம், இழப்பீடு அல்லது உரிமை கோரலுக்கும் நகராட்சி பொறுப்பேற்காது எனவும், ஒப்பந்தாரரே பொறுப்பேற்க வேண்டும் எனவும் உள்ளது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை

அவர்களின் 10.05.2019ம் தேதிய ந.க. எண் 11333/2015/ஜெ2 சுற்றறிக்கையின்படி Sewer Lineல் இறக்கும் நபர்களுக்கு ரூ.10.00 இலட்சம் நஷ்ட ஈடு தொகை வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, 14.11.2019 அன்று காமராஜர் சாலையில் பாதாள சாக்கடைத் திட்ட ஆய்வுத் தொட்டியில் பணியின் பொழுது இறந்த தங்களது நிறுவனத்தின் பணியாளர் திரு.கே.சாதிக்பாட்சா அவர்களின் குடும்பத்தாருக்கு மேற்படி நஷ்ட ஈட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்தினை உடன் வழங்கிஅதன் விபரம் தெரிவிக்க M/s. InfraEn consulting Private Limited பெங்களூரு நிறுவனத்தாருக்கு அறிவுறுத்தப்பட்டதில், மேற்படி நிறுவனத்தினர் இறந்த ஒப்பந்த பணியாளர் திரு.கே.சாதிக்பாட்சா அவர்களது இறப்பிற்கான நஷ்ட ஈடு தொகை ரூ.10.00 இலட்சத்தினை தமக்கு நவம்பர் 2019–ம் மாதத்திற்கு வழங்க வேண்டிய பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்துக் கொள்ள சம்மதம் தெரிவித்துள்ளனர். எனவே, 14.11.2019 அன்று காமராஜர் சாலையில் பாதாள சாக்கடைத் திட்ட ஆய்வுத் தொட்டியில் பணியின் பொழுது இறந்த திரு.கே.சாதிக்பாட்சா அவர்களின் வாரிசுதாரரும், தாயாருமாகிய திருமதி. கே.பாத்திமா பீவி அவர்கள் வசம் ரூ.10.00 இலட்சத்தினை நகராட்சி நிதியிலிருந்து வழங்கவும், மேற்படி தொகையினை பின்னர் M/s. InfraEn consulting Private Limited பெங்களூரு நிறுவனத்தார் இந்நகரில் பாதாள சாக்கடைத் திட்ட அமைப்புகளை இயக்கி பராமரிக்கும் வகையில் வழங்க வேண்டிய பட்டியல் தொகையிலிருந்து பிடித்தம் செய்துக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 5744/2012/இ4**

---

**14)** கும்பகோணம் நகராட்சிக்கு சொந்தமான மூர்த்தி கலையரங்கம் மற்றும் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள காலியிடங்களை PPP முறையில் பொது தனியாருடன் கூடிய வர்த்தகம் செய்வது தொடர்பாக Murali Ads & Publicities நிறுவனத்தாருக்கு அனுமதி அளிக்கப்பட்டது தொடர்பாக திரு.எஸ்.செல்வராஜ், த/பெ. ஏ. செபஸ்தியான், 24 இரண்டாவது தெரு, திருவள்ளுவர் நகர், கும்பகோணம் என்பவரால் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் W.P. (MD) No.17861/2019 வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் (1) அரசுச் செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை . சென்னை, (2) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, (3) நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர், (4) மாவட்ட ஆட்சித் தலைவர், தஞ்சாவூர், (5) நகராட்சி ஆணையர், கும்பகோணம், (6) ஒப்பந்ததாரர் திரு.வீ.கிருஷ்ணமூர்த்தி ஆகியோரை எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை Additional Advocate General (III) திரு.கே. செல்வபாண்டியன் அவர்கள் நகராட்சி சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்காடிய வகையில் அன்னாரது 22.10.2019ம் தேதிய கடிதம் எண் F.B. No.554/2019/AAG-III ல் வழக்கின் தற்போதைய நிலை குறித்து " After hearing the matter the Hon'ble Court was pleased to reserve the matter for Orders." என குறிப்பிட்டுள்ளதுடன் கீழ்க்கண்ட விபரப்படி பட்டியல் தொகை வழங்க கோரியுள்ளார்.

| | | |
|---|---|---|
| 1 | Fees for My appearance on 22.10.2019 with conference fee | Rs.30,000/- |
| 2 | Assistance fee payable to M.Rajarajan, Govt. Advocate, Madurai Bench of Madras High Court. | Rs.5,000/- |
| | Total | Rs.35,000/- |

இவ்வழக்கில் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை Additional Advocate General (III), திரு.கே. செல்வபாண்டியன் மற்றும் எம்.ராஜராஜன் அவர்கள் மூலம் நகராட்சி சார்பில் வழக்காடியமைக்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலக குறிப்பு:

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை எடுத்ததையும் மன்றம்

அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண் 10609/ 2019/இ2**

**15)** வருவாய் நிதியின் கீழ் மாதளம்பேட்டை பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசன் மற்றும் இந்திராகாந்தி சாலை சுகாதார பிரிவு அலுவலக வளாகம் ஆகிய இரு இடங்களில் 9 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைத்தல் பணியினை ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 6.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், அன்று இராஜராஜசோழன் சதய விழா தொடர்பாக உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டதால் 7.11.2019 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஆர். அசோக்குமார் ஒப்பந்ததாரர் | 947482.23 | 943470.54 | மதிப்பீட்டை விட 0.42 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2. | ஜெ.சம்பத் ஒப்பந்ததாரர் | 947482.23 | 1253723.45 | மதிப்பீட்டை விட 32.32 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

__அலுவலக குறிப்பு:__

1. மதிப்பீட்டைவிட 0.42 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு. ஆர். அசோக்குமார், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4284/2018/இ2**
**ம.எண் 48/2019–20**

**16)** வருவாய் நிதியின் கீழ் பாணாதுறை பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசன் மற்றும் பழைய காரனேசன் மருந்தக காலி இடம் ஆகிய இரு இடங்களில் 20 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைத்தல் பணியினை ரூ.15.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 6.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், அன்று இராஜராஜசோழன் சதய விழா தொடர்பாக உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டதால் 7.11.2019 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் ஐடியல் இஞ்சினியரிங், அம்மாசத்திரம் | 1485391.50 | 1483949.83 | மதிப்பீட்டை விட 0.10 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2 | ஆர். அசோக்குமார் ஒப்பந்ததாரர் | 1485391.50 | 1490729.16 | மதிப்பீட்டை விட 0.36 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |
| 3. | ஜெ.சம்பத் ஒப்பந்ததாரர் | 1485391.50 | 1487320.43 | மதிப்பீட்டை விட 0.13 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டைவிட 0.10 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திருவாளர்கள். ஐடியல் இஞ்சினியரிங் நிறுவனத்தாரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4284/2018/இ2**
**ம.எண் 47/2019–20**

---

**17)** வருவாய் நிதியின் கீழ் மாட்டுக் கொட்டகை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகம் மற்றும் பாரத் நகர் பாதாள சாக்கடை பம்பிங் ஸ்டேசன் ஆகிய இரு இடங்களில் 8 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைத்தல் பணியினை ரூ.8.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 6.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், அன்று இராஜராஜசோழன் சதய விழா தொடர்பாக உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டதால் 7.11.2019 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஜெ.சம்பத், ஒப்பந்ததாரர் | 769766.48 | 767652.91 | மதிப்பீட்டை விட 0.27 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2. | எம். ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் | 769766.48 | 968245.94 | மதிப்பீட்டை விட 25.78 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டைவிட 0.27 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.ஜெ.சம்பத், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4284/2018/இ2**
**ம.எண் 45/2019–20**

---

**18)** வருவாய் நிதியின் கீழ் தாராசுரம் அறிஞர் அண்ணா மார்கெட் வளாகம் மற்றும் வராக குளம் பொது கழிப்பிட வளாகம் ஆகிய இரு இடங்களில் 11 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைத்தல் பணியினை ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 6.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், அன்று இராஜராஜசோழன் சதய விழா தொடர்பாக உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டதால் 7.11.2019 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | ஜெ.சம்பத், ஒப்பந்ததாரர் | 670580.57 | 668495.62 | மதிப்பீட்டை விட 0.31 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2. | எம். ராஜேந்திரன் ஒப்பந்ததாரர் | 670580.57 | 874374.89 | மதிப்பீட்டை விட 30.39 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டைவிட 0.31 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திரு.ஜெ.சம்பத், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4284/2018/இ2**
**ம.எண் 49/2019–20**

---

**19)** வருவாய் நிதியின் கீழ் நகராட்சி அலுவலக வளாகம் மற்றும் பெருமாண்டி சுடுகாடு ஆகிய ஆகிய இரு இடங்களில் 11 எண்ணிக்கை பேட்டரியால் இயங்கும் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைத்தல் பணியினை ரூ.12.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 6.11.2019 அன்று முதலாம் அழைப்பில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில், அன்று இராஜராஜசோழன் சதய விழா தொடர்பாக உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டதால் 7.11.2019 அன்று வரப்பெற்ற கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவிற்கு

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின்படி ஒப்பந்தத் தொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. | சதவீத விபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் ஐடியல் இஞ்சினியரிங், அம்மாசத்திரம் | 1196338.44 | 1195168.39 | மதிப்பீட்டை விட 0.10 சதவிகிதம் குறைவு (GST உட்பட) |
| 2 | ஆர். அசோக்குமார் ஒப்பந்ததாரர் | 1196338.44 | 1218114.80 | மதிப்பீட்டை விட 1.82 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |
| 3. | ஜெ.சம்பத் ஒப்பந்ததாரர் | 1196338.44 | 1234792.75 | மதிப்பீட்டை விட 3.21 சதவிகிதம் அதிகம் (GST உட்பட) |

**அலுவலக குறிப்பு:**

1. மதிப்பீட்டைவிட 0.10 சதவிகிதம் குறைவாக கொடுத்துள்ள திருவாளர்கள். ஐடியல் இஞ்சினியரிங் நிறுவனத்தாரின் ஒப்பந்தப் புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 4284/2018/இ2**
**ம.எண் 46/2019–20**

---

**20)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு டெங்கு கொசு உற்பத்தியாகும் நிலைகளை கண்டறிந்து அழிக்கும் நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு மாதாந்திர கணக்கெடுப்பு படிவம் மல்டி கலர் 25000 எண்ணிக்கை விநியோகம் செய்யும் பணிக்கு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Kovilpatti – SSIST Co-Op Society Ltd., 86. A/7 Muthu Complex, New road, Kovilpatti – 628 501 | 4,60,200/– |
| 2. | The Thoothukudi District Hi – Tech Printing and allied Service Industrial Co-Op Society Ltd., Tirunelveli-1 | 4,54,300/– |
| 3. | Tirunelveli District Multi Purpose Service Industrial Co-Op Society Ltd., TNY-2, Tirunelveli-1 | 4,42,500/– |

**அலுவலக குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **Tirunelveli District**

**Multi Purpose Service Industrial Co-Op Society Ltd., TNY-2, Tirunelveli-1** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**நக.எண்.10835/2019/எச்.1**

**21)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு டெங்கு கொசு உற்பத்தி கட்டுப்படுத்தும் நடிவடிக்கைக்கு தேவையான விழிப்புணர்வு தொடர்பாக மல்டி கலர் 25000 எண்ணிக்கை அச்சடித்து வாங்கும் பொருட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | Kovilpatti – SSIST Co-Op Society Ltd., 86. A/7 Muthu Complex, New road, Kovilpatti – 628 501 | 1,26,000/– |
| 2. | The Thoothukudi District Hi – Tech Printing and allied Service Industrial Co-Op Society Ltd., Tirunelveli-1 | 1,20,400/– |
| 3. | Tirunelveli District Multi Purpose Service Industrial Co-Op Society Ltd., TNY-2, Tirunelveli-1 | 1,12,000/– |

**அலுவலக குறிப்பு :** குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள **Tirunelveli District Multi Purpose Service Industrial Co-Op Society Ltd., TNY-2, Tirunelveli-1** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**நக.எண்.10836/2019/எச்.1**

**22)** இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவு திடக்கழிவு மேலாண்மைப்பணி மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்களுக்கு எதிர்வரும் மழைக்காலத்தில் அவசர அவசியம் கருதி பணிபுரிய மழை கோட் வழங்கும் பொருட்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 சட்டப்பிரிவு 15ன்கீழ் விலைப்புள்ளி பெறப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பதிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | திருமலை டிரேடர்ஸ், FF3 ரெங்கா காம்பளக்ஸ், ரம்பா தியேட்டர் அருகில், திருச்சி –2 | 1180/– |
| 2. | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ், 4/10– கீழ சாராய பட்டறை தெரு, உறையூர், திருச்சி –3 | 1200/– |
| 3. | ஆர்.கே.டிரேடர்ஸ், எண்–1, சீதையம்மாள், சந்திரகாசன் நகர், 1–டோல்கேட், திருச்சி | 1250/– |

**அலுவலக குறிப்பு :** அ) குறைந்த விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருமலை டிரேடர்ஸ், திருச்சி–2, நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவரின் முன் அனுமதி பெறப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டதனை அங்கீகரிக்கலாம்.
இ) செலவினத்தொகை ரூ.1,87,620/– வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.
ஈ) பதிவு செய்யலாம்.

**நக.எண்.10966/2019/எச்.1**

**23)** இந்நகராட்சிப் பகுதியில் போக்குவரத்திற்கும், பொதுமக்களுக்கும் அச்சுறுத்தலாக சுற்றித்திரியும் மாடுகளை பிடித்து கோசாலையில் அடைத்திடும் நடவடிக்கை மேற்கொள்ளும் பணியினை மேற்கொள்ள மாடுகளை பிடிக்க உள்ளூரில் விலைப்புள்ளி கோரியதில், வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | மாடு ஒன்றுக்கு | கன்று ஒன்றுக்கு |
|---|---|---|---|
| 1. | திரு.செ.மாணிக்கவாசகம்<br>1128, மாத்தி மெயின்ரோடு,<br>அண்ணலக்ரஹாரம், கும்பகோணம் | 1000/– | 500/– |
| 2. | திரு.கு.சரவணன்<br>பேட்டை வடக்குதெரு, தஞ்சாவூர் சாலை<br>கும்பகோணம் | 1200/– | 700/– |
| 3. | திரு.செ.தமிழ்நேசன்<br>64/29பி, மாதுளம்பேட்டை தெரு<br>சாக்கோட்டை, கும்பகோணம் | 1400/– | 800/– |

**அலுவலக குறிப்பு :** அ. குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திரு.செ.மாணிக்கவாசகம், 1128, மாத்தி மெயின்ரோடு, அண்ணலக்ரஹாரம், கும்பகோணம் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ. செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
இ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை அங்கீகரிக்கலாம்.

**நக.எண்.11759/2019/எச்1**

**24)** இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவு பராமரிப்பு வாகனம் TN.68.Q.3717 வாகனத்தின் பழுதுகள் சீர்செய்து தகுதிசான்று பெறும் பணியை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மன எண்.362, நாள்.30.07.2019 அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் முடிவுக்காக வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1. | சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்<br>தனலெட்சுமி நகர், அஞ்சுதலைவாய்க்கால்<br>மயிலாடுதுறை சாலை, கும்பகோணம் | 1,13,790/– |
| 2. | அன்னை சத்தியா எஞ்சினியரிங் ஒர்க்ஸ்<br>13, ராக்கே நகர்<br>திருவாரூர் | 1,18,799/– |

**அலுவலக குறிப்பு :** அ. குறைந்த விலைவிகித ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், அஞ்சுதலை வாய்க்கால், கும்பகோணம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை அங்கீகரிக்கலாம்.

**நக.எண்.8273 /2019 /எச்1**

**25)** இந்நகராட்சிக்குட்பட்ட இடங்களில் அம்ரூத் திட்டத்தின் கீழ் குடிநீர் குழாய்கள் மற்றும் பாதாள சாக்கடை அமைக்கும் பணி நடைபெறுவதால் distribution lineமற்றும் வால்வு புதுபிக்கும் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்துக்கு மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / அதிகம் |
|---|---|---|
| 1 | Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. | மதிப்பீட்டை விட 0.1% குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | M/s.AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 5 % அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1) மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.1% குறைவாக கொடுத்துள்ள Thiru.N.Saravanan, Contractor, Kumbakonam நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 11279/2019/ /E3**

---

**26)** SDRF - 2019 திட்டத்தின் கீழ் சீனிவாச நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வளாகத்தில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்கும் பணிக்கு உத்தரவு வழங்கப்பட்டு, மேற்படி இடத்தில் பணி துவங்கும் நிலையில், அந்த இடத்தில் ஆழ்துளை கிணறு அமைக்க கூடாது என அப்பகுதி மக்களால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பாதுகாப்பு தர வேண்டி காவல்துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள ஒரு ஆழ்துளை கிணறு மண் சரிவு ஏற்பட்டு நீர் ஆதாரம் மிகவும் குறைந்துவிட்டது. மேற்படி தலைமை நீரேற்று நிலையத்தில் உடனடியாக ஒரு ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே தலைமை நீரேற்று நிலைய நீராதாரத்தை அதிகப்படுத்தும் பொருட்டு புதிய ஆழ்துளை கிணறு அமைக்க வேண்டியதின் அவசியம் கருதியும், சீனிவாச நகரில் ஆழ்துளை கிணறு அமைப்பதற்கு பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், இதே மதிப்பீட்டில் உள்ள இப்பணியை குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையத்தில் அமைப்பதற்கு, மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததற்கும் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண். 5828/2019 /E3**

---

**27)** இந்நகராட்சி பகுதிகளில் உள்ள கழிப்பறைக்கான மோட்டார் மற்றும் பேனல் போர்டுகள் பழுது நீக்கும் பணிக்கு பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.500000/க்கு மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / அதிகம் |
|---|---|---|
| 1 | Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. | மதிப்பீட்டை விட 0.4% குறைவு |
| 2 | M/s.AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 1.3 % அதிகம் |

**அலுவலக குறிப்பு** 1)மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.4 %குறைவாக கொடுத்துள்ளThiru.N.Saravanan,Contractor, Kumbakonam நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 1999/2018/ /E3**

---

**28)** கும்பகோணம் நகராட்சியின் குடிநீர் விநியோகத்திற்கான வளையப்பேட்டை நீர் உந்து நிலையத்தில் 20 எம்.எல்.டி க்கு கிருமி நாசினி (சாதாரண உப்பின் மூலம்) தயாரிக்கப்படும் சோடியம் ஹைப்போ குளோரைடு பிளான்ட் ஓராண்டு காலத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கான உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்துக்கு மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / **அதிகம்** |
|---|---|---|
| 1 | M/s.Aadhavan Traders, Thirupur. | மதிப்பீட்டை விட 0.1 % குறைவு |
| 2 | M/s.Senthilmurugan & Co, Erode. | மதிப்பீட்டை விட 1 % அதிகம் |

**அலுவலக குறிப்பு** 1)மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2)வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.1%குறைவாக கொடுத்துள்ள M/S.Aadhavan Traders,Tirupur.
நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் 7799/2017/ /E3**

---

**29)** கும்பகோணம் நகராட்சி பராமரிப்பு கீழ் இயங்கி வரும் குடிதாங்கியில் உள்ள இரு தலைமை நீரேற்று நிலையங்கள் , வலையப்பேட்டை நீருந்து நிலையம் மற்றும் 13 எண்ணிக்கை மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் ஆகியவற்றை இயக்கும் பணிக்கு ஒப்பந்ததாரர் திரு.என்.சரவணன், அவர்கள் மேற்கொள்ளவும், அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.47.00 இலட்சத்துக்கு மன்றத்தின் பார்வைக்கு,

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | குறைவு / **அதிகம்** |
|---|---|---|
| 1 | M/S.N.Saravanan Contractor, Kumbakonam, | மதிப்பீட்டை விட 1.07 % குறைவு |
| 2 | M/S. AB Builders, Kumbakonam. | மதிப்பீட்டை விட 4.06 % அதிகம் |

**அலுவலக குறிப்பு** 1)மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2)வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவாக கொடுத்துள்ள Thiru.N.Saravanan,Contractor, Kumbakonam. நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
3) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 11702/ 2018 /இ3**

---

**30)** இந்நகராட்சி பகுதியில் போக்குவரத்திற்கும் பொதுமக்களுக்கும் இடையூறாக சுற்றித்திரிந்த மாடுகளை பிடிக்க அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920ன்படி சட்டப்பிரிவு.15ன்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மாடுகள் பிடிக்கப்பட விலைப்புள்ளி பெறப்பட்டதில், குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திரு.எஸ்.மாணிக்கவாசகம் என்பவர் மூலமாக மாடுகள் பிடிக்க கட்டணமாக ரூ.38000/– (ரூபாய் முப்பத்தெட்டாயிரம் மட்டும்) வழங்க மன்றத்தின் பதிவுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**
1. பதிவு செய்யலாம்.
2. செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**31)** இந்நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவிற்கு புதிய வெர்ஷன் கணினி– 1 எண்ணம் GEM விலைவிகிதத்தில் வழங்கும் பணிக்கு விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | M/s.VR Computers, Kumbakonam | Rs.81250/- |

**அலுவலக குறிப்பு** 1)M/s.VR Computers,Kumbakonam. நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2) மன்ற அனுமதியினை எதிர்நோக்கி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்க அங்கீகரிக்கலாம்.

**ந.க. எண்.8096 /2019 /இ3**

**32)** கும்பகோணம் நகர்மன்ற தீர்மான எண்.318, நாள்.05.07.2019 அனுமதி பெறப்பட்ட தீர்மானம் கீழ்கண்டவாறு திருத்திய மன்றப்பொருள் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது. கும்பகோணம் நகராட்சி சுமார் 12.58 சதுர கீ.மீ பரப்பளவினை கொண்டு 45 வார்டுகளாக பிரிக்கப்பட்டு 550 தெருக்களை கொண்ட தஞ்சாவூர் மாவட்டத்தில் முக்கிய கோவில்கள் நகரங்களுள் ஒன்றாக உள்ளது. இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் 458 ஆகும். 146 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணியில் உள்ளனர். 312 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியிடம் காலியாக உள்ளது. இந்நகர் பகுதியில் மேற்கண்ட பணியாளர்களை கொண்டு 100 சதவீதம் முழுமையான சுகாதார பணிகளை மேற்கொள்ள மிகவும் சிரமமான சூழ்நிலை உள்ளது. அரசாணை நிலை எண்.101 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்30.04.1997ல் திருத்திய அளவுகோலின்படியும், கணக்கீடு செய்யப்பட்ட குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனங்களின் தூய்மைப்பணி மேற்கொள்ள இந்நகராட்சிக்கு தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் விபரம் கீழ்க்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வேலை வகைப்பாடு | துப்புரவு பணியாளர்கள் எண்ணம் |
|---|---|---|
| 1. | 250 குடியிருப்புகளுக்கு அல்லது 3 கிலோ மீட்டர் சாலைகளுக்கு 3 நபர் கொண்ட குழு வீதம் 36105 குடியிருப்புகளுக்கு தேவையான துப்புரவு பணியாளர்கள் | 434 |
| 2. | டாடா ஏஸ் (LCV) 10 எண்ணிக்கை வாகனம் இயக்குவதற்கு (10x2) | 20 |
| 3. | நுண்ணுயிரி செயலாக்க மையம் (எம்.சி.சி) (5X10 =50) | 50 |
| 4. | பேருந்து நிலையத்திலும் மற்றும் அங்காடியிலும் உள்ள கட்டண கழிப்பறை பராமரிக்க 1 பணியாளர் வீதம் 2 கட்டண கழிப்பறைகளுக்கு தேவையான பணியாளர்கள். | 2 |
| 5. | உரக்கிடங்கு பராமரிப்பிற்கு நாள்தோறும் 70 மெட்ரிக் டன் குப்பைகள் சேரும் இடத்திற்கு தேவையான பணியாளர்கள் | 4 |
| 6. | பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணமில்லா மூன்று கழிப்பறை மற்றும் ஆண் சீறு நீர் கழிப்பிடம் தேவைப்படும் பணியாளர்கள் | 7 |
| 7. | பேருந்து நிலையத்தினை சுத்தம் செய்ய (A கிரேடு பேருந்து நிலையத்திற்கு) | 4 |
| 8. | பத்து லட்சம் வரை வருமானம் வரக்கூடிய நகராட்சி அங்காடி மற்றும் அங்கு உள்ள கூடுதல் வருமானம் ஒவ்வொரு பத்து லட்சத்திற்கும் கூடுதல் பணியாளர்கள் 2 நபர் வீதம் | 40 |
| **மொத்தம் (வ.எண்.1 + 2 + 3 + 4 + 5 + 6 + 7 + 8)** | | **561** |

தற்போது இந்நகராட்சியில் பணியாற்றும் துப்புரவு பணியாளர்களின் பணியிடத்திற்கும் அளவுகோலின்படி அனுமதிக்கப்பட்ட பணியிடத்திற்கும் கீழ்க்கண்டவாறு துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை பற்றாக்குறையாகவுள்ளது.

| வ.எண் | விபரம் | எண்ணம் |
|---|---|---|
| 1. | அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்கள் பணியிடங்கள் | 458 |
| 2. | அரசாணை எண்.101(ந.நி)நாள்.30.04.1997ன் படி கணக்கீடு செய்யப்பட்ட பணியாளர்கள் எண்ணம் | 561 |
| 3. | தற்போது பணிபுரியும் பணியாளர்கள் | 146 |
| 4. | அளவுகோலின் படியும், பணிபுரியும் பணியாளர்களுக்கும் உள்ள வித்தியாசம் | 415 |

கும்பகோணம் நகராட்சியில் 561 துப்புரவு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர். தற்போது நகராட்சியில் 146 பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். பார்வை 3–ல் காணும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.46384/P3/2012, நாள்.03.12.2013 நிர்வாக அனுமதி மூலம் இந்நகராட்சியில் 26 வார்டுகளில் குப்பைகளை, குப்பைகளின் எடை வீதம் அகற்றும் பணிக்கு ஒப்பந்தம் கோரப்பட்டு **19.02.2014–ந்** தேதி முதல் 26 வார்டுகளில் குப்பைகள் அகற்றும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மேற்கண்ட ஒப்பந்த காலம் **19.11.2019–ந்** தேதியுடன் முடிவடைந்தது. மேலும் நகர்மன்ற தீர்மானம் எண்.**537**, நாள்.**29.10.2019** மூலம் ஒப்பந்தகாலம் **19.02.2020** தேதி வரை நீடிக்கப்பட்டு துப்பரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் மேற்கண்ட 26 வார்டுகளில் ஒப்பந்ததாரரால் ஈடுபடுத்தப்பட்டு வரும் பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்ணயம் செய்த தொகையைவிட குறைவாகவே ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கப்படுவதால், பணியாளர்களில் திடக்கழிவு விதி 2016ன்படி குப்பைகளை பிரித்து வாங்க இயலாத நிலையே உள்ளது. எனவே ஒப்பந்தகாலம் நிறைவு பெற்ற தேதியில் ஒப்பந்தத்தை நிறுத்தும்பட்சத்தில் நகரில் குப்பைகளை அகற்றி சுகாதாரமாக வைக்கும்பணியில் தொய்வு ஏற்படும். எனவே அளவுகோலின்படி தேவைப்படும் 415 பணியாளர்களை **Outsourcing** முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியமர்த்த அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் வீடுவீடாக குப்பை சேகரித்தல் மற்றும் 5 எண்ணிக்கை கொண்ட தலா 5 டன் கொள்ளளவு கொண்ட (MCC) நுண் உர மையங்களில் கலவை உரம் தயார் செய்தல் மற்றும் 34 எண்ணிக்கை OCC போன்ற பணிகள் செவ்வனேச் செய்ய 415 துப்புரவு பணியாளர்கள் பற்றாக்குறையாக உள்ளது. எனவே 415 பணியாளர்கள் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்ததாரர் மூலமாக ஈடுப்படுத்தப்பட வேண்டியுள்ளது.

எனவே தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள தினக்கூலி அடிப்படையில் 415 துப்புரவு பணியாளர்களுக்கான கூலி கீழ்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ளது.

**<u>துப்புரவு பணியாளர்கள் செலவினங்கள் விபரம்</u>**

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் , தஞ்சாவூர் அவர்களின் தினக்கூலி பட்டியலின் படி துப்புரவு பணியாளர்களுக்கு 2019–20ஆம் ஆண்டிற்குரிய தினக்கூலி **(நாள் ஒன்றுக்கு)** | ரூ.385/– |
| 2. | ஒரு துப்புரவு பணியாளருக்கு கூலி விபரம் **(ஒரு ஆண்டுக்கு 385 x 365)** | ரூ.1,40,525/– |
| | EPF 13.61% | ரூ.19,125/– |
| | ESI 3.25% | ரூ.4,567/– |
| | சீருடை மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் **(ஒரு ஆண்டுக்கு )** | ரூ.1,500/– |
| | ஒப்பந்ததாரருக்குரிய நிர்வாக செலவினம் ( 5% ) | ரூ.7,026/– |
| | **மொத்தம்** | **ரூ.1,72,743/–** |
| | **415 துப்புரவு பணியாளர்களுக்கு ஒரு ஆண்டிற்குரிய செலவினம் (ரூ.1,72,743/- x 415)** | **ரூ.7,16,88,345/–** |

கும்பகோணம் நகராட்சியில் உள்ள 45 வார்டு பகுதிகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் திறம்பட செயல்படுத்தவும், வீடு வீடாக குப்பைகளை சேகரித்தல் மற்றும் நுண் உர மையங்களில் கலவை உரம் தயாரிக்கும் பணி மேற்கொள்ளவும், 415 துப்புரவுபணியாளர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி 3 வருடங்கள் பணியில் ஈடுபடுத்தவும் இதற்கான ஒரு வருடத்திற்கான செலவினம் ரூ.7.16 கோடி நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் பணித்திறன் மதிப்பீடு செய்து

ஒப்பந்த தொகையில் 5% உயர்வு செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தம் புதுப்பிக்கவும், பற்றாக்குறையாக உள்ள துப்புரவு பணியாளர்களை தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி மூன்று வருடம் பணியமர்த்திக்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அனுமதி பெற உரிய கருத்துரு தயார் செய்து மன்றப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** அ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்
ஆ) நகர்மன்ற தீர்மான எண்.318, நாள்.05.07.2019 அனுமதி பெறப்பட்ட தீர்மானம் திருத்திய மன்றப்பொருளுக்கு அனுமதி வழங்கலாம்.
இ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.6256 / 2019 / எச்1**

---

**தனி அலுவலர் மற்றும் ஆணையர்**
**கும்பகோணம் நகர்மன்றம்**